# 8

# மரித்தோர் உயிர்த்தெழுதல்

*“இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும். அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும் படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்” (யோவா. 5:28, 29).*

கடந்த காலக் கலாச்சாரங்களின் மதங்கள், மரித்தோர் உயிர்த் தெழுதலைப் பற்றிய தங்கள் போதனைகளில் மாறுபட்டிருக்கையில், அவர்களில் பெரும்பாலானவர்கள், ஏதோ ஒரு வகையில் இன்னொரு வாழ்வு இருக்கும் என்று நம்பிக்கை கொண்டிருந்தனர். எகிப்தியர்கள் தங்கள் அரசர்கள் மற்றும் பிரபுக்கள் ஆகியோரின் [மரித்த] உடல்களைப் பதப்படுத்தி, அவர்களுக்குப் பிந்திய வாழ்வில் பயனுள்ளதாயிருக்கும் என்று தாங்கள் நினைத்த பொருட்களை அவர்களின் கல்லறைகளில் சேர்த்துக் குவித்து வைத்தனர். கிரேக்கர்கள், ஆத்துமாவுக்கான ஒரு பயணம் என்ற “இடம் மாறுதல்” என்பதைப் போதித்தனர். யூதத்துவ வேத வசனங்கள் உயிர்த்தெழுதல் பற்றிக் குறிப்பிட்டன ஆனால் அவைகள் அதைப் பற்றி வழக்கிற்கு அப்பாற்பட்ட வெளிப்படுத்துதல் எதையும் தரவில்லை. இது அந்த மார்க்கத்தில் பின்வரும் இரண்டு பெரும் பிரிவினர் ஏற்படக் காரணமாய் இருந்திருக்கலாம்: சதுசேயர்கள், இவர்கள் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை இல்லாதவர்கள் (மத். 22:23), மற்றும் பரிசேயர்கள், இவர்கள் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை உடையவர்கள் (அப். 23:8). வெளிப்படுத்துதல் எதையும் கொண்டிராத பழங்கால உலகமானது இவ்விடத்திற்குப் பின்புள்ள வாழ்க்கையைக் குறித்துத் தனது சொந்த எண்ணப்போக்கை வளர்த்துக் கொண்டிருந்தது, ஆனால் அது அப்படிப்பட்ட ஒரு நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான திடமான அஸ்திபாரத்தைப் பெற்றிருப்பதில் குறைவுபட்டிருந்தது (எபே. 2:12; 1 தெச. 4:13).

உயிர்த்தெழுதல் ஒன்று இருக்கும் என்பது பற்றிப் புதிய ஏற்பாடு நமக்கு வழக்கிட இயலாத ஆதாரத்தைத் தருகிறது. இதைப் பின் வரும் வார்த்தைகள் விவரிக்கின்றன: anastasis (மத். 22:23; லூக். 14:14; யோவா. 5:29; அப். 1:22, 2:31), anistemi (மத். 17:9; 20:19; லூக். 16:31; அப். 2:24; 13:33), மற்றும் egeiro (யோவா. 5:21; 12:1, 17; அப். 3:15). இந்த வார்த்தைகள் மரித்த எல்லாருடைய உயிர்த்தெழுதலையும் குறிப்பிடுவதில்லை என்றாலும், சந்தர்ப்பப் பொருளின் பயன்பாடானது, அப்படிப்பட்ட குறிப்பு அர்த்தப்படுகிறது என்று முடிவு செய்வதைச் சுலபமாக்குகிறது.

*உயிர்த்தெழுதல் உண்டு என்று போதிக்கும் வேத வசனப்பகுதிகளில் சிலவாக யோவான் 5:25-29; அப். 24:15; மற்றும் 1 கொரி. 15:22 ஆகியவை உள்ளன.*

## *இயேசு உயிர்ப்பிக்கப்பட்டாரா?*

*இயேசுவின் உயிர்த்தெழுதலும் மரித்த எல்லாருடைய உயிர்த்தெழுதலும் புதிய ஏற்பாட்டின் முக்கியமான ஆய்வுக் கருத்தாக உள்ளன. இயேசு மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டார் என்றும் நாம் உயிர்ப்பிக்கப்படுவோம் என்றும் வேதாகமம் தைரியமாக உறுதிப்படுத்துகிறது (1 பேது. 1:3, 4). அப்போஸ்தலர்கள் இயேசுவின் அற்புதங்களினாலும் போதனைகளினாலும் மனம் ஈர்க்கப்பட்டிருந்தனர். அவரது மரணம் அவர்களைக் குழப்பமும் ஏமாற்றமும் அடையச் செய்தது, ஆனால் அவரது உயிர்த்தெழுதல் அவரே தேவகுமாரனாகிய மேசியா என்று அவர்களை நம்பி இணங்கச் செய்தது (அப். 2:32-36). இயேசுவின் உயிர்த்தெழுதல் பற்றிய போதனை நம்மைப் போன்றே அவர்களுக்கும் மையக்கருத்தாக இருந்தது; ஏனெனில் இயேசு உயிர்த்தெழவில்லையென்றால், அவர் கிறிஸ்து அல்ல என்றாகிறது, அவ்வாறிருந்தால், நாம் இன்னமும் நமது பாவங்களிலேயே இருப்போம், மற்றும் நாம் கிறிஸ்துவின் அல்லது நமது சொந்த உயிர்த்தெழுதலில் நம்பிக்கை வைக்க எந்த அடிப்படையையும் கொண்டிராது இருப்போம். இதைப் பவுல் பின்வருமாறு குறிப்பிட்டார்:*

> *கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும். நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே. இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம் (1 கொரி. 15:17-19).*

*இயேசுவின் உயிர்த்தெழுதல் என்பதே தொடக்க கால சபையின் செய்தியினுடைய இருதயம் போன்ற மையப்பகுதியாக இருந்தது (அப். 1:22; 2:31; 4:2, 33; 17:18, 32; 23:6). பவுலின் பிரசங்கித்தல் ஏதேனும் குறிப்பைக் கொடுக்கிறது என்றால் (அப். 24:15, 21; 1 கொரி. 15:12), அது சபையின் மிக முக்கியமான ஆய்வுப்பொருளாகவே இருந்தது. உயிர்த்தெழுதலுக்கு, அப்போது சாத்தியமாயிருந்திராத, நம்பி இணங்க வைக்கக் கூடிய விஞ்ஞானப் பூர்வமான ஆதாரத்தை முன்வைத்தல் என்பது சபையின் முயற்சியாக இருந்ததில்லை; மாறாக அவர்கள், மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்த இயேசுவைத் தாங்கள் கண்டிருந்த தங்கள் சாட்சியத்தைக் கொடுத்தனர் (அப். 2:32; 4:33; 1 கொரி. 15:4-8) - இது வேதவாக்கியங்களில் முன்னுரைக்கப்பட்டிருந்த ஒரு உயிர்த்தெழுதலாயிருந்தது (அப். 2:29-31; 1 கொரி. 15:4). இந்த சாட்சியத்தின் அடிப்படையில், சபையானது ரோம உலகம் முழுவதிலும் மற்றும் அந்தக் காலத்தில் உலகம் என்று அறியப்பட்டிருந்த தூரமான பகுதி முழுவதிலும் காட்டுத் தீயைப் போலப் பரவிற்று*

(கொலோ. 1:23). அவர்களின் சாட்சியத்தினுடைய உண்மை நிறைந்த தன்மையானது அவர்களின் இரத்த சாட்சியான மரணத்தின்மூலம் அறிவிக்கப்பட்டது.

## அவருடைய உயிர்த்தெழுதல் எதைப் போல் இருந்தது?

நமது உயிர்த்தெழுதலானது இயேசுவின் உயிர்த்தெழுதலினுடைய இயல்பைப் பின்தொடரும் என்பதால், அவரது உயிர்த்தெழுதலைப் புரிந்துகொள்வது நமக்கு உதவும்.

இயேசுவின் உயிர்த்தெழுந்த சரீரம் எதைப் போல் இருந்தது? கல்லறையில் வைக்கப்பட்ட இயேசுவின் சரீரம் உயிர்த்தெழவில்லை, ஆனால் தேவனால் எடுத்துப்போடப்பட்டது என்று சிலர் நம்புகின்றனர். இதன் பின்பு, இயேசு ஆவிக்குரிய, வானத்திற்குரிய இயல்பை மேற் கொண்டார். அவர் தமது பின்பற்றாளர்களால் பார்க்கப்பட்டபோது, அவர்கள் தாங்கள் பற்றிக் கொண்டிருந்தது அவரைத்தான் என்று அறியும் படிக்கு எளிமையான வகையில் உடற்பொருளானார் என்று இவர்கள் நம்புகின்றனர்.

மற்றவர்கள், இயேசுவின் உடல் உயிர்ப்பிக்கப்பட்டது, ஆனால் அது ஒரு மகிமையுள்ள, ஆவிக்குரிய உடலாக மாற்றப்பட்டது என்ற கருத்தைப் பற்றிக் கொண்டுள்ளனர். அது புதைக்கப்பட்ட அதே உடலாகவே இருந்தது, ஆனால் அது உலகரீதியான உடலாக உயிர்ப்பிக்கப்படாமல், ஆவிக்குரிய உடலாக உயிர்ப்பிக்கப்பட்டது என்று இவர்கள் கூறுகின்றனர். அவரது உயிர்த்தெழுந்த உடலானது, கிறிஸ்தவர்கள் தங்கள் உயிர்த் தெழுதலுக்குப் பின்பு பெறவிருக்கின்ற மகிமையுள்ள, ஆவிக்குரிய உடல் களைப் போன்றதாகவே ஆயிற்று என்ற கருத்தில் இவர்கள் நிறைவடை கின்றனர்.

இயேசு உலகப்பிரகாரமான உடலை மேற்கொண்டபோது, அவர் பூமிக்கு வருவதற்கு முன்பு மகிழ்வுடன் அனுபவித்துக் கொண்டிருந்த தமது ஆவிக்குரிய இருப்பை என்றென்றைக்குமாகத் துறந்தார் என்று சிலர் போதிக்கின்றனர். அவர் மகிமையுள்ள உயிர்த்தெழுந்த மனித உடலைக் கொண்டிருப்பதற்காக அந்த ஆவிக்குரிய நிலவுகையை என்றென்றைக் குமாகத் துறந்தார் என்று அவர்கள் வாதிடுகின்றனர். இந்த உடலை மேற்கொள்ளுதல் என்பது பாவம் நிறைந்த மனிதருக்காக அவரது தியாகத் தின் ஒரு பகுதியாக இருந்தது என்று அவர்கள் கூறுகின்றனர்.

இன்னும் மற்றவர்கள், உயிர்ப்பிக்கப்பட்ட இயேசுவின் உடல், கல்லறைக்குள் வைக்கப்பட்ட இயல்பான அதே உடலாக, எவ்வித மாற்றமும் இல்லாததாக இருந்தது என்று நம்புகின்றனர். அவர் உலக இயல்பற்ற பரலோகத்திற்கு ஏறிச் செல்லும் வரையில் இந்த உடலைத் தக்க வைத்துக் கொண்டார், மற்றும் அதன் பின்பு இந்த உடல் கீழே போடப் பட்டது/வீழ்த்தப்பட்டது என்று இவர்கள் கூறுகின்றனர்.

முதல் இரண்டு கண்ணோக்குகள், உயிர்த்தெழுந்த இயேசு ஏன் சிலரால்

*அடையாளம் கண்டுகொள்ளப்படாதிருந்தார் (யோவா. 21:4) என்பதையும், அவர் மூடப்பட்டிருந்த கதவினூடே எவ்வாறு கடந்து சென்றார் (யோவா. 20:19) என்பதையும் விளக்கப்படுத்துவதற்காக வழக்கமாகப் பற்றிக் கொள்ளப்படுகின்றன. இந்த நிகழ்ச்சிகள், அவர் இயல்பான உடலுக்குப் பதிலாக ஆவிக்குரிய உடலைக் கொண்டிருந்தார் என்று கருத்துத் தெரிவிக்கலாம்; இருப்பினும், அவரது மரணத்திற்கு முன்பே கூட அவர் எப்பொழுதுமே அடையாளம் கண்டுகொள்ளப்பட்டிருந்ததில்லை (மத். 14:26), மற்றும் கூட்டத்தார் அவரைக் கொலை செய்யத் தேடியபோது அவர்களினூடே அவர் கடந்து சென்றிருந்தார் (லூக். 4:29, 30). மேலும், அவர் தண்ணீரின்மீதும் நடந்தார் (மத். 14:26) - இது தெய்வீக வல்லமை இல்லாதிருந்தால் இயல்பான உடலினால் செய்ய முடியாத செயலாக உள்ளது.*

*இயேசுவின் ஊழியத்தின் தொடக்க நாட்களில் அவர், தமது உடலின் உயிர்த்தெழுதல் பற்றித் தீர்க்கதரிசனம் கூறியிருந்தார். அவர், "இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" என்று கூறினார் (யோவா. 2:19). அவர் எருசலேம் தேவாலயத்தைப் பற்றிப் பேசியதாக யூதர்கள் நினைத்தனர், "அவரோ, தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார்" (யோவா. 2:21). அவர் உயிர்த்தெழுந்தபோது அவரது சீஷர்கள் அவரது [இந்த] வாக்குத் தத்தத்தை நினைவுகூர்ந்து அவரில் விசுவாசம் கொண்டார்கள் (யோவா. 2:22). இயேசு தமது உடலின் உயிர்த்தெழுதலை நம்பி அதைப் பற்றித் தீர்க்கதரிசனம் உரைத்தார். அவரது உடல் உயிர்த்தெழவில்லையென்றால், அவர் ஒரு கள்ளத்தீர்க்கதரிசி என்றாகிறது.*

*இயேசு தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு தாம் கொண்டிருந்த உடலானது சிலுவையில் மரித்த அதே உடலாகவே இருந்தது என்பதற்கு ஏராளமான ஆதாரத்தையும் கொடுத்தார், ஏனெனில் அவரது உடலில் சிலுவையில் அறையப்பட்டதால் ஏற்பட்டிருந்த காயங்களின் ஆதாரங்கள் இன்னமும் இருந்தன (யோவா. 20:25-29). அவரது உடல் தொடக்கூடிய தாயிருந்தது (மத். 28:9; லூக். 24:39; யோவா. 20:17, 27ஐக் காணவும்), மற்றும் அவர் தாம் மாம்சமும் எலும்புகளும் கொண்டிருப்பதைத் தமது சீஷர் களுக்கு நிரூபிப்பதற்காக உணவை உண்டார் (லூக். 24:41-43). அவர் களிடத்தில் அவர், "நான்தான் என்று அறியும்படி, என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள், நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே" என்று கூறினார் (லூக். 24:39). இவ்விதமாக இயேசு, தமது உயிர்த்தெழுந்த உடலானது சிலுவையிலிருந்து எடுக்கப்பட்டுக் கல்லறையில் கிடத்தப்பட்ட அதே உடலாகவே இருந்தது என்று போதித் தார். எம்மாவு சாலையில் சென்றுகொண்டிருந்த இரண்டு சீஷர்களின் கண்கள் தடை செய்யப்பட்டிருந்ததால் அவர்களால் இயேசுவை அடையாளம் காண இயலாதிருந்தது (லூக். 24:16), இது அவர் அடையாளம் காணப்பட முடியாதவராயிருந்தார் என்பதால் நடந்ததல்ல. பிற்பாடு அவர்கள் கண்கள் திறக்கப்பட்டபோது (லூக். 24:31) அவர்கள் அவரை*

அடையாளம் கண்டு கொண்டனர். அவர் முற்றிலும் மாறுபட்டவராயிருந்தால், அவர்களின் கண்கள் திறக்கப்பட்ட போதும் கூட அவர்களால் அவரை அடையாளம் கண்டிருக்க இயலாது, மற்றும் அவர் உயிர்த்தெழுந்தது நிச்சயம் என்று அவர்கள் அறிந்திருக்கமாட்டார்கள்.

இயேசுவின் உயிர்த்தெழுதல் பற்றிக் கேள்வி கேட்கப்படக் கூடாதபடிக்குப் போதுமான எண்ணிக்கையில் மக்களுக்கு இயேசு தம்மைக் காண்பித்திருந்தார். ஒரே வேளையில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட மக்களுக்கு அவர் தரிசனமான நிகழ்ச்சி உட்பட பல சாட்சியங்களைப் பவுல் பட்டியலிட்டார் (1 கொரி. 15:3-7). நம்பத்தகுந்த இரண்டு சாட்சிகள் கருத்தொருமைப்பட்டிருந்தால், ஒரு வழக்கறிஞர், எதிர்த்து வழக்கிட இயலாத ஒரு வழக்கைக் கொண்டிருப்பார். சட்ட நீதிமன்றம் ஒன்றில், இயேசுவின் சரீர உயிர்த்தெழுதல் பற்றிய வழக்கு வெற்றி பெறும் மற்றும் இது இவ்வளவு அதிகமான சாட்சியங்களின் சாட்சியத்தின் அடிப்படையில் மறுக்க இயலாத நிகழ்ச்சியென்று விதிக்கப்படும்.

## உயிர்ப்பிக்கப்படுவது என்ன?

நமது உயிர்த்தெழுதல், இயேசு அனுபவித்த உயிர்த்தெழுதலைப் போன்றதாக இருக்குமா? நமது உடல்கள் உயிர்ப்பிக்கப்படுமா? நமது உடல்கள் உயிர்ப்பிக்கப்படும் என்றால், அவைகள் எதைப்போல் இருக்கும்? நமது ஆத்துமாக்களும் ஆவிகளும் நமது உடல்களுடன் மறுபடி இணைவுகொள்ளுமா?

மரணத்தில், ஒரு உடலானது கல்லறையில் வைக்கப்படுகிறது (யோபு 21:32), மற்றும் அது திரும்பவும் மண்ணுக்குச் செல்லுகிறது (ஆதி. 3:19), ஆனால் ஆத்துமாவும் ஆவியும் இவ்வாறு ஆவதில்லை. அவைகள் உடலை விட்டு நீங்கி[1] பாதாள உலகத்திற்குச் செல்லுகின்றன (லூக். 16:22, 23).

உயிர்த்தெழுதலில், கல்லறையில் இருக்கும் உடல்கள் இயேசுவின் குரலைக் கேட்டு வெளியே வரும் (யோவா. 5:28, 29). ஆத்துமாவும் ஆவியும் கல்லறையில் இருப்பதில்லை, எனவே உடல் மாத்திரமே உயிர்ப்பிக்கப்படும். ஆத்துமாவும் ஆவியும் கல்லறையில் அல்ல ஆனால் காணப்படாத உலகமாகிய பாதாளத்தில் இருப்பதால், பாதாளத்தில் இருந்து அவைகள் வெளிவரும் (வெளி. 20:13). அவைகள் பாதாளத்தில் தங்கியிருக்கையிலும் கூட, அவைகள் இன்னும் உணர்வுள்ளவைகளாக உயிருள்ளவைகளாக வாழ்ந்து கொண்டிருக்கும். உடல் உயிர்ப்பிக்கப்படவில்லை என்றால், உயிர்த்தெழுதல் இராது. உடல் உயிர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை என்றால், பிரிந்து சென்றவர்களின் உடல்களை உயிர்ப்பிக்க இயேசு பூமியை அணுகத் தேவையிராது; அதற்குப் பதிலாக, அவர் பாதாளத்திற்குச் சென்று ஆத்துமாக்களையும் ஆவிகளையும் எழுப்புவது அவசியமாயிருக்கும், இருப்பினும் இயேசு, மரித்தவர்களை அவர்களின் கல்லறையில் இருந்து ஒன்றுகூட்டுவதற்குத் திரும்பவும் வருகின்றார் (1 தெச. 4:16; யோவா. 5:28, 29ஐக் காணவும்), இது உடல் உயிர்ப்பிக்கப்படும் என்பதற்கு நல்லதொரு சுட்டிக்காண்பித்தலாக உள்ளது.

இயேசுவின் மறுவருகையில், உடலின் உயிர்த்தெழுதல் மறைமுகமாய்க் குறிப்பிடப்பட்டிருப்பது மாத்திரமல்ல, ஆனால் உடலானது வாழ்விக்கப் படும் என்றும் வேதாகமம் உரைக்கிறது: "அன்றியும் இயேசுவை மரித்தோரி லிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோமர் 8:11; 8:23ஐக் காணவும்). அழியக்கூடிய, இயல்பான இந்த உடல் மரணத்தில் இயக்கமற்றுப் போகக்கூடிய "அது"வாக உள்ளது ஆனால் "அதுவே" ஆவிக்குரியதாகவும் அழியாமையுள்ளதாகவும் எழுப்பப்படும். "அதுவே" அந்த உடலாக உள்ளது, மற்றும் "அது" மாத்திரமே ஆவிக் குரியதாக மாற்றம் அடைகிறது (1 கொரி. 15:51). உடலானது உயிர்ப்பிக்கப் படாமல், அதே வேளையில் ஆவிக்குரிய உடலாக மாற்றமடைந்தது என்றால், "[உயிரோடிருக்கும் மற்றும் மரித்திருக்கும்] நாம் யாவரும்" அழிவுக்குரியதிலிருந்து அழியாமைக்கு, சாவுக்கேதுவானதிலிருந்து சாவாமைக்கு, "ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே" மறுரூபம் அடைய மாட்டோம் (1 கொரி. 15:51-54). ஆத்துமாவும் ஆவியும் பாதாளத்தில் உயிரோடிருப்பதால், உயிர்த்தெழுதல் என்பது உடலை மாத்திரமே குறிப்பதாக இருக்க வேண்டும்.

சிதைவடைந்த உடலின் உயிர்த்தெழுதல் என்பது சாத்தியமற்றது என்று கூறுவதன்மூலம் சிலர் மறுத்துரைக்கின்றனர். இந்த மறுதலித்தலானது தேவனுடைய வல்லமையையும் (மாற். 12:24) தேவன் கல்லறைகளைத் திறந்து சற்று காலம் மரித்தோராயிருந்த மக்களை மீண்டும் வாழும்படிக்குக் கொண்டு வந்தார் என்ற உண்மையையும் அசட்டை செய்கிறது. இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்தபோது உயிர்ப்பிக்கப்பட்டவர்கள், அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, எருசலேம் நகருக்குள் சென்றனர் (மத். 27:52, 53). மரித்திருந்த அந்த மக்களைத் தேவன் உயிர்ப்பிக்க முடியும் என்றால், காலத்தின் முடிவில் அவரால் நம் யாவரையும் உயிர்ப்பிக்க முடியுமே.

## நமது உடல்கள் எவ்விதமாய் இருக்கும்?

உயிர்த்தெழுந்த உடலானது நம்முடைய தற்கால உடல் போன்றதாக இராது (1 கொரி. 15:37). அது அழிக்கப்பட முடியாத ஆவிக்குரிய உடலாக, மகிமையும் வல்லமையும் உடையதாக, வானவரின் சாயலுக்கு மாற்றப் பட்டதாக இருக்கும் (1 கொரி. 15:48, 49). அது ஒரு உலகப்பிரகாரமான/ இயல்பான உடலாக இராது, ஏனெனில் "மாம்சமும் இரத்தமும் தேவனு டைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது, அழிவுள்ளது அழியாமையை சுதந்தரிப்பதுமில்லை" (1 கொரி. 15:50). நாம் இயேசுவைப் போல் இருப்போம் (1 யோவா. 3:2), அவர் "எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலி. 3:21). ஆவிக்குரிய ஜீவிகள் என்ற

*வகையில் நாம் தூதர்களைப் போன்று இருப்போம் மற்றும் திருமணம் செய்துகொள்ளாதிருப்போம் (மத். 22:30; மாற். 12:25; லூக். 20:34-36ஐக் காணவும்).*

*நமது வடிவமானது இனியும் உலகம் சார்ந்ததாயிராது. உயிர்த்தெழுத லில் நாம் ஆவிக்குரிய, நித்தியமான, மனித கண்களால் காணமுடியாத ஒரு பரிமாணத்திற்குள் (2 கொரி. 4:18), நாம் மரிக்க முடியாத, தேவன் இருக்கும் வட்டாரத்திற்குள் (லூக். 20:36) பிரவேசிப்போம்.*

## *இந்த உயிர்த்தெழுதலில் என்ன நடைபெறும்?*

*மரித்தோரின் உயிர்த்தெழுதல் பற்றிப் பல கேள்விகள் கேட்கப் பட்டுள்ளன: யாரெல்லாம் உயிர்ப்பிக்கப்படுவார்கள்? உயிர்த்தெழுதல் எப்போது நடைபெறும்? உயிர்த்தெழுதலுக்குப் பின்பு நாம் எவ்விதமா யிருப்போம்? புதிய ஏற்பாட்டில் பின்வரும் பதில்கள் தரப்பட்டுள்ளன:*

*(1) இயேசு திரும்பவும் வரும்போது இது நடைபெறும் (1 கொரி. 15:22, 23; 1 தெச. 4:13-18).*

*(2) மரித்த நல்லவர் தீயவர் ஆகிய அனைவரும் உயிர்ப்பிக்கப் படுவார்கள் (யோவா. 5:28, 29; அப். 24:15ஐக் காணவும்).*

*(3) நீதிமான்களும் துன்மார்க்கரும் ஒரே நாழிகையில், ஒரே வேளையில் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (யோவா. 5:28, 29).*

*(4) உயிர்த்தெழுதலின் வேளையில் பூமியின்மீது மக்கள் வாழ்ந்து கொண்டிருப்பார்கள் (1 கொரி. 15:51; 1 தெச. 4:17).*

*(5) அது பூமியிலிருந்த உயிருள்ளவர்கள் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பு நடைபெறும் (1 தெச. 4:16, 17).*

*(6) உயிர்த்தெழுப்பப்பட்ட மரித்தவர்களும் மற்றும் உயிரோடிருப் பவர்களும் ஒன்றுகூடி, ஆகாயத்தில் இயேசுவைச் சந்திப்பார்கள் (1 தெச. 4:17).*

*(7) இயேசு மற்றும் பிரதான தூதன் ஆகியோரின் குரல்கள் கேட்கப்படும், கல்லறைகளில் இருந்து மரித்தவர்களை அழைப்பதற்கு எக்காளம் சத்தமிடும் (யோவா. 5:25, 28; 1 கொரி. 15:51, 52; 1 தெச. 4:16), லாசருவை எழுப்பிய அதே குரல்தான் எல்லாரையும் மரித்தோரிலிருந்து எழுப்பும் (யோவா. 11:43).*

*(8) தேவனுடைய வல்லமையானது மரித்தோரை எழுப்பும் (1 கொரி. 6:14; 2 கொரி. 1:9ஐக் காணவும்). பிதாவும் குமாரனும் ஆகிய இருவருமே இந்த வல்லமையைக் கொண்டுள்ளனர் (யோவா. 5:21); இருப்பினும், பிதாவானவர் தமது குமாரன் மூலமாகவே இந்த உலகத்தைப் படைத்தது போலவே (1 கொரி. 8:6), அவர் மரித்தோர் யாவரையும் இயேசுவின் மூலமாகவே எழுப்புவார் (2 கொரி. 4:14).*

*(9) எழுப்பப்பட்ட உடல்கள் அழியாமையுள்ள உடல்களாக இருக்கும் (1 கொரி. 15:51-54).*

*இவைகள்தான் உயிர்த்தெழுதலின் நாளில் நடைபெறும் பிரதானமான நிகழ்ச்சிகளாகும். அந்த நாளுக்கு நாம் ஆயத்தமாக இருந்தால், அது ஒரு*

பயபக்தியான வேளையாக, ஒரு மாபெரும் அனுபவமாக இருக்கும்.

## முடிவுரை

இயேசு திரும்ப வரும்போது, மரித்தோர் யாவரும் எழுப்பப் படுவார்கள் மற்றும் அவர்களின் ஆவிகள் புதிய ஆவிக்குரிய நித்தியமான உடல்களுடன் ஒன்றிணைக்கப்படும். இவ்விதமாக, மரணம் என்பது, இயேசுவின் மூலம் வெல்லப்பட்ட ஒரு வெற்றியால் ஜெயிக்கப்பட்டு விழுங்கப்படும் (1 கொரி. 15:57; யோவா. 11:25; அப். 4:2ஐக் காணவும்). இந்த மாபெரும் நிகழ்ச்சியானது இயேசு "பூமியை அறுவடை" செய்ய வரும் கடைசி நாளில் நடைபெறும். நாம் ஆயத்தமாயிருப்போம், ஏனெனில் அவர் திரும்பி வரும் நாளை நாம் அறிவதில்லை!

---

குறிப்பு

[1]ஆதி. 35:18; பிர. 12:7; 1 இரா. 17:21, 22; லூக். 23:46; யாக். 2:26 ஆகிய வசனங்களைக் காணவும்.